# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, பெப்புருவரி மாதம் 9 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 9.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2007 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 9 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ—(கூட்டி) 22/2004

**சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகம்" என அழைக்கப் படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட வதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும், காரியங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதற்குப் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகத்தில் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) "சமஸ்த லங்கா சர்வதேச அபிவிருத்திக் கழகம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்

கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்க லாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவ மும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாகும் என வெளிப்படுத்தப்படுகின்றது:—

(அ) இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல் ;

(ஆ) சிறிய நகர மற்றும் கிராமப் பகுதிகளிலும், பெருந்தோட்டத்துறையிலும் கமத்தொழில், பண்ணை விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடித்தொழில் என்ப வற்றின் அபிவிருத்திக்கான கருத்திட்டங்களைத் தாபித்தலும், பராமரித்தலும், ஊக்குவித்தலும் ;

(இ) பெருந்தோட்டத் தொழில்துறையைச் சார்ந்த இளைஞர் கள் சுயவேலைவாய்ப்பில் ஈடுபட அவர்களை இயலச் செய்யும் முகமாக சிறு கைத்தொழில்களில் பயிற்சி யளித்தல் ;

(ஈ) இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியேயும் கருத்தரங்குகள், விரிவுரைகள், கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகள் நடாத்துவதன் மூலம் கல்வியை மேம்படுத்தல் ;

(உ) கல்வியை முன்னேற்றுவதற்காக புலமைப்பரிசில்கள், இணையுரிமைப் பரிசுகள், ஆதாரவுதவிப் பணங்கள், பரிசில்கள் மற்றும் ஏனைய அளிப்புகள் வழங்குதலும், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உறைவிட வசதி, தங்குமிட வசதி அத்துடன் வேறு வசதிகள் மற்றும் மானியங்கள் வழங்குதல் ;

(எ) அதற்குத் தேவைப்படும் வீதி அபிவிருத்தி மற்றும் நிர்மாண வேலையையும், ஏதேனும் கட்டிடத்தையும், எந்திர சாதனத்தையும் சீர்திருத்துதலும், பேணுதலும் அத்தகைய வேறு தொடர்புபட்ட சேவைகளை ஏற்பாடு செய்தலும் ;

(ஏ) இலங்கையிலும், வேறெங்காயினும் மாநாடுகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், தொகுதி ஆய்வுகள் மற்றும் விரிவுரைகள் என்பவற்றுக்கு ஆதரவளித்தலும் அவற்றை நடாத்துதலும் ; அத்துடன்

(ஐ) அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் விரும்பத்தக்கதெனக் கருதக் கூடிய புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், பருவ வெளியீடுகள் என்பவற்றை அச்சிடலும், வெளியிடலும், விநியோகித்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணம் கடன் எடுத்தல் அல்லது திரட்டுதல் ;

(ஆ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றுச் சாதனங்கள் என்பவற்றை வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கொடுத்து மாற்றுதல், வாங்குதல், விற்றல் அத்துடன் வழங்குதல் மற்றும் இலங்கையிலும், வேறெங்காயினும் வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்தல், பேணுதல் மற்றும் மூடுதல் ;

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக உசிதமாகக்கூடிய எவையேனும் சட்டபூர்வ நம்பிக்கைப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளுதல், நிறைவேற்றுதல், புரிதல் மற்றும் நிருவகித்தல் ; கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக உசிதமாகக்கூடிய எவையேனும் சட்டபூர்வ நம்பிக்கைப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளுதல், நிறைவேற்றுதல், புரிதல் மற்றும் நிருவகித்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தின் செலவில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்கலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், ஓய்வூதியங்களையும், பணிக்கொடைகளையும் கொடுத்தலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக உடனடியாகத் தேவைப்படாத கூட்டுத்தாபனத்தின் எல்லாப் பணங்களையும் இலங்கை அரசாங்கத்தின் பிணைப்பொறுப்புகளில் அல்லது இலங்கையில் வேறு ஏதேனும் முதலீட்டில் முதலீடு செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் முகாமை, கட்டுப்பாடு மற்றும் நிருவாகம் என்பன கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்படக்கூடிய தலைவர் உட்பட அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும்

விதிகளுக்கமையவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆட்சிப் பேரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

*(2)* இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தேதியன்று பதவி வகிக்கின்றவர்கள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** *(1)* காலத்திற்குக் காலம், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், இடைநிறுத்தம் செய்தலும், உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் ;

(ஆ) பேரவை தேர்ந்தெடுத்தல், பதவி தாங்குநர் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும், அவர்களின் தத்துவங்களும், நடத்தைகளும், கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் நியமனமும், பதவி விலக்கலும் தத்துவங்களும், கடமைகளும், ஒழுக்கமும் ;

(ஈ) பேரவை கூட்டுத்தாபனம் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலும் அத்தகைய கூட்டங்களின் அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் கருமமாற்றுதலும்.

(2) ஒராமுட்பிரிவின் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் காலத்துக்குக்காலம் ஏதேனும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று அதே கூட்டத்திலும், அதே முறையிலும் மாற்றப்படுதல் வேண்டும். அதற்குச் சேர்க்கப்படுதல் வேண்டும் அல்லது நீக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், கைமாற்றங்கள், நன்கொடைகள் அல்லது ஒப்பப்பணங்கள் அத்துடன் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் கூட்டுத்தாபனத்தின் பெயரில் பேரவையினால் முடிவு செய்யப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது பல வங்கிகளில் வைப்பிலிடப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசேவைக்கும் அபிவிருத்தி செய்யும் அல்லது சீராக்கும் நோக்கத்துக்காக கூட்டுத்தாபனம், ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டத்தில், முறைப்படி இயலுமானதாகவும், ஆற்றலுடையதாகவும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

**9.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரால் கொடுபடற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத் தொகையை விஞ்சும் உதவுதொகை எதனையும் செலுத்தப்படவேண்டிய பொறுப்புடையவராதலாகாது. *உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை.*

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று கழகத்துக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தினத்தன்று கழகத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். *கழகத்தினால் செல்மதியாக உள்ளனவும், அதற்குச் செலுத்தப்பட உள்ளனவுமான கடன்கள்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பங்களித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். *கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**12.** *(1)* கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும். *கணக்குகளும் கணக்காய்வும்.*

*(2)* கூட்டுத்தாபனமானது அதன் வருமானம், மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவின் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் பொதுச் செயலாளரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய இருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறெவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்